Arimā Nōkku

# அரிமா நோக்கு

4:1 ஏப்ரல் 2010

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்
International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
4:1 ஏப்பிரல் 2010


மெய்ப்பொருள் காண்பது அறிவு
- *வ. ஜெயதேவன்* 03

சிங்கப்பூரில் சிறுகதை இலக்கியம்: வரலாறும் முன்னேற்றமும்
- *சீதா லட்சுமி* 04

Herman Tieken's Personal Conjectures: The Date and Nature of Puranan̲ūru
- *P. Marudanayagam* 11

காலந்தோறும் பெண் கவிஞர்களின் உள இயற்பண்பியல்
- *ம. கணேசன்* 17

Study of the Indus Script
- *Asko Parpola* 20

தமிழ் அகராதிகளில் இலங்கைத் தமிழ்ச் சொற்களும் சொற்பொருள்களும்
- *சுபதினி ரமேஷ்* 31

வினா-விடை
- *சோ. ந. கந்தசாமி* 37

பஞ்சபூதங்களில் பரந்தாமன்
- *ச. அன்பரசி* 43

எம்மா கோல்டுமேன் (Emma Goldman) (1869-1940)
- *இரா. பிரேமா* 46

யாப்புக் கோலமும் மொழிக் கோலமும் (ஒரு கம்பன் கவிதை)
- செ. வை. சண்முகம் 56

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு ஆய்வரங்கம் 63

*மற்றும்*

*நூல். ஆய்வாளர் அறிமுகம். கவிதைகள். துணுக்குகள்*


# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு: தமிழக முதல்வர் அறிவிப்புகள் குறித்து...

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு. கடந்த சூன் 23 முதல் 27- வரை கோவை மாநகரில் நன்றாக நடந்து முடிந்தது என்று சொன்னால் எம் நெஞ்சு நிறைவுகாணாது. உலகத் தமிழர் பார்வையை. தமிழறிஞர்கள் பார்வையை உணர்வு நிலையிலும். உண்மைகளை நோக்கிய ஆய்வு ஆர்வ முயற்சிப் போக்கிலும் திருப்பியுள்ளது என்கிற வகையில் வெற்றி முத்திரை பதித்து உரத்த புகழை ஒளிபிலிற்றி நிலை நாட்டியுள்ளது என்று தற்செருக்கோடும் தலைநிமிர்வோடும் சொல்லத் தோன்றுகிறது.

செம்மொழி எனத் தமிழ் நடுவண் அரசால் ஆவணப்படுத்தப்பட்ட பிறகு தமிழக அரசே. முதல்வர் கலைஞர் அவர்களின் கவனிப்பில். திட்டமிடலில். நெறிகாட்டலில் முழுமையாக ஈடுபட்டுப் பிழை தழைக்காவண்ணம் மாநாட்டைத் தமிழ்த்தாய்க்கு ஓர் அழகிய அணியாக இழைத்தெடுத்து அணிவித்துள்ளது. தமிழக அமைச்சர்கள் மட்டுமன்றி. ஆட்சி அலுவலர்களும் பாராட்டுக்கு உரியவர்கள். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சிறப்புக்கூறாக நடைபெற்ற இணையமாநாடு. அறிவியல் தமிழ் மீதான உலகத் தமிழர் அக்கறையையும் வருநாள் வளர்ச்சிகள் குறித்த கணிப்புகளையும் வெளிப்படுத்தியது.

நிறைவுநாளில் (27.06.2010) தமிழக முதல்வர் அறிவித்த அறிவிப்புகள் விழுமியன தமிழுக்குப் பயக்கும் வெளிப்பாடுகள் என்று கருதலாம்.

1. தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசு அலுவல் வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கச் சட்டம் நிறைவேற்றப்படும்.
2. இந்திய அரசின் அரசமைப்புச்சட்டத்தில் இடம்பெற்றுள்ள தமிழை இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக்க வேண்டும். இந்திய அரசின் அரசு அமைப்புச்சட்டத்தில் காணப்படும் மொழிகள் யாவற்றையும் நடுவண் அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவது பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட **சித்தாந்த மகாபத்ரா குழு** அறிக்கை உடனடியாக வெளியிடப்பட வேண்டும்.
3. மாநிலங்களில் உள்ள நடுவண் அரசு அலுவலகங்கள் எல்லாவற்றிலும் மாநில ஆட்சி மொழிகளே அவ்வம் மாநில அலுவல் மொழியாக ஏற்பளிக்கப்பட்டுச் செயற்படுத்த வேண்டும்.

இம்மூன்று முடிவுகள் அல்லது அறிவிப்புகள் முதல்வர் கலைஞர் அறிவிப்புகளில் முதன்மையானவையாகக் கருதப்பட வேண்டியவை. இவற்றுள் பின்னைய இரண்டு கோரிக்கைகள் வெற்றிபெறத் தமிழக அரசு தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளின். மக்களின் ஆதரவை ஒருமுகமாகத் திரட்ட வேண்டும். அதுமட்டும் போதாது. நமது அண்டை மாநிலங்களிலும், இந்தியாவின் பிறமாநிலங்களிலும் இந்திய அரசு அமைப்புச்சட்டத்தில் இடம் பெற்றுள்ள 22 மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடத்தும்-அரசிடத்தும் இது குறித்த உணர்வு எழுச்சி ஏற்படவும்-கோரிக்கையாக அது கூர்மைபெறவும் முயற்சிகள் முனைப்பாகத் தோன்றவேண்டும். →

மும்மொழிக் கோட்பாட்டு நடைமுறையாளர்களுக்கு-இத்தகைய பார்வையோ தேவையோ இருப்பதாகத் தெரியாதபோது-தமிழ்மொழியை இந்தியாவின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக்க எழுப்பும் கோரிக்கையில் தமிழகம் வெற்றிகாண்பது எளிதாக இருக்குமா? தென்மாநிலங்கள் அளவிலேனும் முதற்கட்டமாக. இக்கோரிக்கைக்கு வலுத்திரட்ட வேண்டும். தமிழைப்போல, கன்னடத்திற்கும், தெலுங்கிற்கும் செம்மொழித் தகுதி ஆவணப்படுத்தல் பெற்றுள்ள கருநாடகத்தின், ஆந்திராவின் ஆதரவுகளை இணைத்து, மலையாள மொழி பேசும் கேரளத்தையும் அணைத்துக் கொள்ள வாய்ப்புண்டா என்று பார்க்க வேண்டும்.

அண்டை மாநிலங்களில் அல்லது அனைத்திந்திய அளவில் மற்றைய மாநிலங்களில், இவ்வழியிலான முயற்சித் திறப்புக்களை எதிர்பார்ப்பதோ, உருவாக்குவதோ எளிதில்லை என்னும் நிலையில், தமிழகமே முன்னோடியாகக் களத்தில் இறங்கி வெற்றி பெற, இன்றைய அரசியல் சூழலில் முதல்வர் கலைஞர் முயன்றால் முடியும். எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்றும் தமிழ்! முழக்கம் வாகை சூடத் தமிழர் எல்லோரும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக நிற்போம். ♦


*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டண விவரம்

**ஈராண்டுக் கட்டணம் ரூ. 150/- US $ 10**
**வாழ்நாள் கட்டணம் ரூ. 2000/- US $ 100**
**புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $ 200**
**நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 10,000/- US $ 500**

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்: நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15, 000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10, 000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500 |

***தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி விளம்பரம் செய்ய முகமை பெற விழையும் முகவர்களும், இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.***


அரிமா நோக்கு
4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com
செல்: 9380626448